பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

23. 01. 2025 7 .15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மகாராஷ்ரா மாநிலம் ஜல்கான் மாவட்டத்தில் கர்நாடக எக்ஸ்பிரஸ் ரயில் மோதியதில் புஷ்பக் எக்ஸ்பிரஸ் ரயில் பயணிகள் 12 பேர் உயிரிழந்தனர்.
2. நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் பங்களிப்பு அடுத்த ஐந்து ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்தில் ஒரு பகுதி அளவிற்கு இருக்கும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
3. சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோசில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தின்போது 54 ஒப்பந்தங்களில் மகாராஷ்டிரா அரசு கையெழுத்திட்டுள்ளது.
4. குடியரசு தின நிகழ்ச்சி அணிவகுப்பின் முழு ஒத்திகை இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.
5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.,

*----- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

மகாராஷ்ரா மாநிலம் ஜல்கான் மாவட்டத்தில் கர்நாடக எக்ஸ்பிரஸ் ரயில் மோதியதில் புஷ்பக் எக்ஸ்பிரஸ் ரயில் பயணிகள் 12 பேர் உயிரிழந்தனர்.

பச்சோரா பகுதியில் நேற்று மாலை நேரிட்ட இந்த விபத்தில் 14 பேர் காயமடைந்தனர்.

புஷ்பக் ரயிலின் ஒரு பெட்டியில் தீப்பிடித்ததாக புரளி ஏற்பட்டதை அடுத்து, அதிலிருந்த பயணிகள் ரயிலிலிருந்து இறங்கிய நிலையில், மற்றொரு தடத்தில் வந்து கொண்டிருந்த கர்நாடக எக்ஸ்பிரஸ் ரயில் மோதி இந்த விபத்து நேரிட்டதாக மத்திய ரயில்வே தெரிவித்துள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி, உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா. மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவாக்ளின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திப்பதாகக் கூறியுள்ளார்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்பட்டு வருவதாக அவர் தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களின் சிகிச்சைக்கான செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும் மகாராஷ்டிரா முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நாட்டில் 2030-ஆம் ஆண்டிற்குள் பத்தாயிரம் புவிசார் குறியீடுகள் என்ற இலக்கை எட்டும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த துறை மூலம் தற்போது வரை 605 புவிசார் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

புவிசார் குறியீடுகளை பெரும் வகையில் சிறந்த பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று திரு பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் பங்களிப்பு அடுத்த ஐந்து ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்தில் ஒரு பகுதி அளவிற்கு இருக்கும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2022-23-ஆம் நிதி ஆண்டில் தேசிய வருவாயில் 11 புள்ளி ஏழு நான்கு சதவீதம் அளவிற்கு டிஜிட்டல் பொருளாதாரத்தின் பங்களிப்பு இருக்கும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது அது விரைவாக வளர்ச்சியடைந்து வருவதாக அமைச்சகம் கூறியுள்ளது.

டிஜிட்டல் பொருளாதாரத்தை பயன்படுத்தும் வளரும் நாடுகளில் இந்தியா முதன்மை நாடாக இருக்கும் என்று அமைச்சககத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 128-வது பிறந்த தினம் பராக்கிரம தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி நேதாஜி பிறந்த ஊரான ஒடிஸா மாநிலம் கட்டாக்கில் மூன்று நாள் கொண்டாட்டத்தை அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி தொடங்கி வைக்கிறார்.

பார்பதி கோட்டையில் நடைபெறும் இந்நிகழ்ச்சி பிரதமர் திரு நரேந்திரமோடியின் காணொலி செய்தியுடன் தொடங்குகிறது.

நேதாஜி வாழ்க்கை குறித்த புத்தகம், புகைப்படம், கடிதம், ஆவணங்கள் இடம்பெறும் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சிற்பம் மற்றும் ஓவியப் போட்டிகளும் நடைபெறுகின்றன.

நேதாஜி வாழ்க்கை வரலாறு குறித்த திரைப்படமும் திரையிடப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த இல்லம் தற்போது அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோசில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தின்போது 54 ஒப்பந்தங்களில் மகாராஷ்டிரா அரசு கையெழுத்திட்டுள்ளது.

இது குறித்து அம்மாநில முதலமைச்சர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சுமார் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இந்த ஒப்பந்தத்தின் மூலம் பல்வேறு துறைகளில் 16 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உயிரி எரிசக்தி, பசுமை ஹைட்ரஜன், சில்லரை விற்பனை, தரவு மையங்கள், விருந்தோம்பல் உள்ளிட்ட துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

உலகளாவிய முதலீட்டை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக இது அமைந்துள்ளது என்று மகாராஷ்டிரா அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மேற்குவங்க மாநிலத்தில் பயிற்சி பெண் மருத்துவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி சஞ்ஜய் ராய்-க்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று கோரி கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் சிபிஐ மேல்முறையீடு செய்துள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்ட சஞ்ஜய் ராய்க்கு கொல்கத்தாவின் சியால்டா நீதிமன்றம் அண்மையில் ஆயுள் தண்டனை விதித்ததை அடுத்து, இந்த மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

குடியரசு தின நிகழ்ச்சி அணிவகுப்பின் முழு ஒத்திகை இன்று நடைபெறுகிறது.

தில்லி கடமைப்பாதையில் இன்று காலை பத்தரை மணி முதல் இந்த அணிவகுப்பு ஒத்திகை நடைபெறவுள்ளது.

இதில் ராணுவ டாங்கிகள், ஏவுகணைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

பல்வேறு மாநிலங்களின் அலங்கார ஊர்திகளும, கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

விமானப்படையின் போர் விமானங்கள், சாகசங்களை நிகழ்த்தவுள்ளன.

இந்த அணிவகுப்பு ஒத்திகையையொட்டி தலைநகர் தில்லியில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

வானில் ஆறு கோள்களையும் ஒரே நேர் கோட்டில் காணும் அரிய நிகழ்வு கடந்த 21-ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது.

இந்த அரிய நிகழ்வை காண்பதற்கு சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள பிர்லா கோளரங்கம் சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இன்று யூரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய இரண்டு கோள்களை பெரிய தொலைநோக்கி வழியாக மட்டுமே காண முடியும் என்று பிர்லா கோளரங்கத்தின் இயக்குநர் திரு லெனின் தமிழ்கோவன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - லெனின் தமிழ்கோவன் ) ---32 செகண்ட்*

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவிற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பக்தர்களின் வசதிக்காக செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான **chatbot** தொழில்நுட்மூலம் தகவல்களை அளிக்க உத்திரபிரசேத அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இதனை பயன்படுத்தி வாகனம் நிறுத்தும் இடங்கள், உணவகங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றின் இருப்பிடம் குறித்து அறிந்து கொள்ளலாம்.

அத்துடன் வங்கி சேவை, போக்குவரத்து, கண்காட்சி மையங்கள் ஆகியவை குறித்த தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம்.

மொபைல் போன்களில் க்யூ ஆர் கோடை ஸ்கேன் செய்வதன் மூலம் இந்த தகவல்களை யாத்ரிகர்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்) /*

**[]<<<>>>[]**

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.,

கோலாலம்பூரில் இப்போட்டி நண்பகல் 12 மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 132 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

133 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா 12 புள்ளி ஐந்து ஓவரில் மூன்று விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக அபிஷேக் சர்மா 34 பந்துகளில் 79 ரன் அடித்தார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை மறுநாள் சென்னையில் நடைபெறவுள்ளது.

***End of News***